<u>CC No.86/2015, நாள்:16.03.2020</u>

அ.சா.8 ___ கோவிந்தம்மாள் க/பெ. செல்வம்

முதல் விசாரணை வாக்குமூலம்

நான் பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது சின்னமாமனார். கடந்த 2015ம் வருடம் ஒருநாள் பகல் வேலையில் எனது வீட்டு அருகே உள்ள அடிபம்பில் தண்ணீர் எடுக்க சென்றபோது எனது வீட்டிற்கு மேற்குபக்கம் சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது அ.சா.1ஐ யாரோ அடித்து தாக்கியிருந்தார்கள். அடிப்பட்ட அ.சா.1ஐ கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். அ.சா.1ஐ யார் எதற்காக தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த 25.2.2015ம் தேதி பகல் 12.00 மணியளவில் அ.சா1ன் வீட்டு அருகே சத்தம் கேட்டு சென்று பர்த்தபோது எதிரி சரவணன் தென்னம்பட்டையை எடுத்து அச.1ன் தலையில் அடித்தார் என்றும். செங்கல்லால் வலது புறு அல்லையில் குத்தினார் என்றும், எதிரி லட்சுமணன் அ.சா.1ஐ கையால் முதுகின் மீது அடித்தார் என்றும், தேங்காயை எடுத்து வலது தோள்பட்டையில் அடித்து காயப்படுத்தினர் என்றும், மற்ற எதிரிகள் அ.சா.1ன் அங்கிருந்து ஓடவிடமாமல் தடுத்து நிறுத்தினார்கள் என்றும், சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் ஓடியவுடன் மேற்படி எதிரிகள் அ.சா.1ஐ விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்றும் அ.சா.1ஐ விசாரித்தபோது அ.சா.1, 1ம் எதிரிக்கு ரூ.10000ம் கொடுக்கவேண்டியதை கேட்டு பிரச்சனை செய்து அடித்ததாக சொன்னதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

<u>CC No.86/2015, நாள்:16.03.2020</u>

அ.சா.9 ___ முருகம்மாள் க/பெ. கோவிந்தராஜ்

முதல் விசாரணை வாக்குமூலம்

நான் பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது ப்கககத்து வீட்டுக்காரர். கடந்த 2015ம் வருடம் ஒருநாள் பகல் வேலையில் எனது தோட்டத்தில் இருந்தபோது எனது வீட்டருகே சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது அ.சா.1ஐ யாரோ அடித்து தாக்கியிருந்தார்கள். அடிப்பட்ட அ.சா.1ஐ கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா1ஐ யார் எதற்காக தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த 25.2.2015ம் தேதி பகல் 12.00 மணியளவில் அ.சா1ன் வீட்டு அருகே சத்தம் கேட்டு சென்று பர்த்தபோது எதிரி சரவணன் தென்னம்பட்டையை எடுத்து அச.1ன் தலையில் அடித்தார் என்றும். செங்கல்லால் வலது புறு அல்லையில் குத்தினார் என்றும், எதிரி லட்சுமணன் அ.சா.1ஐ கையால் முதுகின் மீது அடித்தார் என்றும், தேங்காயை எடுத்து வலது தோள்பட்டையில் அடித்து காயப்படுத்தினர் என்றும், மற்ற எதிரிகள் அ.சா.1ன் அங்கிருந்து ஓடவிடமாமல் தடுத்து நிறுத்தினார்கள் என்றும், சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் ஓடியவுடன் மேற்படி எதிரிகள் அ.சா.1ஐ விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்றும் அ.சா.1ஐ விசாரித்தபோது அ.சா.1, 1ம் எதிரிக்கு ரூ.10000ம் கொடுக்கவேண்டியதை கேட்டு பிரச்சனை செய்து அடித்ததாக சொன்னதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.